**UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE &**
**GIRLS' COLLEGE P.P.A**
**SWITZERLAND**

# வானவில் 2006



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – சுவிஸ்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – சுவிஸ்



தட்டுங்கள்
திறக்கப்படும்
PALMYRA
Kalkbreitestrasse 99
8004 Zürich, Switzerland
044 451 62 22 Fax:044 451 62 23
Natel:076 428 62 22, 079 311 55 29
சட்ட ஆலோசனை
ஆங்கில வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
CONSULTING
TRANSLATION




Ruby Foto
Digital World
உங்கள் விழாக்கள் எதுவாயினும் நவீன டிஜிற்றல் முறை மூலம்
போட்டோ அல்பங்கள், வீடியோ செய்து கொடுக்கப்படும்
Digital Foto Album
Pass Photo
IC Photo
Goldbrunnenstrasse, 8055 Zürich, Switzerland
Tel:044 451 69 91 Mobile:079 397 12 13

# Uduppiddy American Mission College & Girls' College P.P.A Switzerland

உலகையளாவிக் கிளைத்து வருகின்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் இவ்வாண்டு சுவிஸ் நாட்டில் வானவில் கொண்டாடுவது என்னுள் அளவற்ற மகிழ்ச்சியை ஊற்றுப்படுத்துகிறது.

இன்று என்னுள் ஊறும் உணர்வுகள் கல்லூரிக்காலத்துக்கு என்னை அழைத்துச் செல்கின்றன. காலங்கள் பல கடந்த பின்பும், கடல்கள் தாண்டி வந்த பின்பும், கோலங்கள் மாறிய பின்பும் இன்னும் அந்தக் கல்லூரி நினைவுகள் நெஞ்சுக்குள் நெருங்கியதாக, பசுமையானதாக நிற்கிறது. இதற்கு என்ன காரணமென எண்ணிப்பார்க்கிறேன். அறியாச் சிறுவர்களாக அண்டிய எங்களுக்கு அறிவு தந்து பாடவிதானத்துக்கு அப்பால் வாழ்வுப் பயிற்சியும் தந்து எம்மைச் சிறுகச் சிறுக வளர்த்தது எமது கல்லூரி.

அது வெறுமனே மணியொலியும் வகுப்பறைப் பாடங்களுமாக ஓய்ந்து போய்க் கிடக்கவில்லை. அங்கு எப்போதும் ஐக ஐக என ஒரு வாழ்வு நிகழ்ந்து கொண்டிருக்கும். விளையாட்டு, உடற்பயிற்சி, சாரணியம், நாடகம், விழாக்களென அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், எல்லோரும் ஒன்றிணைந்து அந்த வாழ்வின் பங்காளர்களாகி, படிப்பு மட்டுமல்ல பண்பாடு, தைரியம், ஆற்றல், ஆளுமை யாவுமே பரிமாறிய பசுமையான காலம்.

சிறிய வயதிலே நான் அறிந்த, பார்த்த பெரிய பாலம் வல்லைப்பாலம். வல்லைவெளியை ஊடறுத்துப்போகின்ற நீண்ட அந்தப்பாலம் என் சின்ன மனதில் பதிந்து போன பெரிய விஷயம். போகிற வாகனத்துக்காக வருகிற வாகனம் பாலத்துக்கப்பால் காத்திருப்பது நான் பார்த்து அறிந்து கொண்ட முதலாவது போக்குவரத்து விதி. வல்லை தாண்டி யாழ்ப்பாணம் போய் பிறகு ஆனையிறவு தாண்டி கொழும்பு போய், கடைசியில் கடல் தாண்டி சுவிஸ் வந்து வாழ்வை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் தகுதியை என்னுள் வளர்த்து விட்டது எனது கல்லூரி. என் வாழ்வின் வளர்ச்சியின் அடியில் தளமாய் பதிந்திருக்கிற என் கல்லூரி வாழ்வு என் நெஞ்சத்து நினைவுகளில் உச்சியில் வைத்துப் போற்றப்படும்.

சுவிஸ் நாட்டில் மட்டுமல்ல ஏனைய பல நாடுகளிலும் வாழ்கின்ற எனது கல்லூரித்தோழர்களை கண்டு உறவாடவும், கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளுக்காக எம்மாலான பங்களிப்பைச் செய்யவும் வானவில் வழி சமைப்பதையிட்டு நான் அகமகிழ்கிறேன். இவ்விழா பெரு வெற்றி காண ஆர்வத்தோடு வாழ்த்துகிறேன். இனி வரும் ஆண்டுகளில் ஏனைய நாடுகளிலும் வானவில் பெரும் புகழ் படைத்து பேசப்படும் என்பது எனது நம்பிக்கை.

நன்றி! வணக்கம்!!



தலைவர்

சி. கணபதிப்பிள்ளை
உடுப்பிட்டி அமெரிகன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - சுவிஸ்

Office: Militärstrasse 84, 8004 Zürich, Switzerland 'President: 079 439 88 34 'Secretary: 044 4800 500

# Uduppiddy American Mission College

## முன்னாள் அதிபரின் செய்தி

கல்லூரி என்பது கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டு மாணவர் ஆசிரியரை உள்ளடக்கிய கட்டடத்தொகுதியன்று. பல திறன்களை உடைய நுகர்வோரின் மத்தியில் அவர்களுக்கு விருப்ப மற்ற அறிவை விற்கும் சந்தையுமன்று. அது பல்வேறுபட்ட ஆளுமைகளைக் கொண்ட ஆன்மீகத் தொகுப்பும் துடிப்புள்ள ஒரு சமூகமையம் சக்தியுள்ள வாழ்க்கையை எந்நேரமும் ஒளிவிடும் வியப்புக்குரிய நிலையம். சுமநிலை ஆளுமையுடைய பிரசைகளை உருவாக்கும் பணியில், கருத்துக்கள், பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள் என்பனவற்றை குழந்தைகளிடையே மாற்றியமைக்கும் நிறுவனம். பலமான உடலமைப்பு, விழிப்பான மன நிலை, உறுதியான உணர்வு நிலை, செழுமையான கலாச்சாரம், திறமான சமூகப்பாங்கு என்பனவற்றைச் செப்பனிட்டு நாட்டின் விதியை நிர்ணயிக்கும் செயற்பாடுகள் நிறைந்த இடம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், உடுப்பிட்டி என்ற கிராமத்தின் மேற்குறிப்பிட்ட செயற்பாட்டிற்கு வித்திட்ட கல்லூரிகளாகவும், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய இக் கல்லூரிகள் சாதித்தவை பல.
இன்று இக் கல்லூரிகளில் கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் சர்வதேச பழைய மாணவர் ஒன்றியத்தினை ஆரம்பித்து இரண்டாவது ஆண்டு விழாவாக சுவிற்சர்லாந்தில் கொண்டாடுவது களிப்பூட்டும் நிகழ்வாகும். வாழ்க்கையில் வெற்றி பெற்ற நமது கல்லூரி பழைய மாணவர்களை அறிந்து கொள்ளவும், வழிகாட்டவும், இத்தகைய சர்வதேச பழயை மாணவர் ஒன்றியம் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது.
வளர்க, வளம்பெறுக.



கி. நடராசா

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
முன்னாள் அதிபர்.


Bombay Sweet
Indian Special Sweet
சுவிசில் முதல்தர முதலாவது சுவீட் ஸ்தாபனம்
இனிமையான இனிப்பு வகைகளும் சுவையான
சிற்றுண்டி வகை உணவுகளும்.
இவை அனைத்தையும் உங்களுக்காக
விசேடமாக இந்தியாவில் இருந்து இறக்குமதி
செய்து உங்கள் தேவையை பூர்த்தி செய்ய
காத்திருக்கிறது.. பாம்பே சுவீட்.
Quellenstrasse 28
8005 Zürich Switzerland
Tel:044 440 10 14, Fax:044 440 10 13
www.bombaysweet.ch , e.mail.bombaysweet@bluewin.ch


ONLINETECHNETWORK
தமிழ்
கணணிதொழில்நுட்பகல்லூரி
MilitärStrasse 84. 8004 Zurich Tel.076 524 80 59 -076 570 8059
Adobe Photoshop
நீங்கள் கற்க ஆவலாக உள்ளீர்களா? உங்கள் கனவு நனவாகட்டும்
நீங்கள் எம்மிடம் Adobe Photoshop மிகஇலகுவான முறையில்
குறுகியகாலத்தில் கற்றுக்கொள்ளமுடியும் அத்துடன் உங்களுக்கு
Digital Printing பயிற்சியும் வழங்கப்படும் இதனால் Menu
cards,Flyars,Photoediting போன்றதேவைகளை நீங்களாகவே
பூர்த்தி செய்துகொள்ளமுடியும். எம்மிடம் தொடர்புகொண்டு இலவச
ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு MilitarStrasse 84. 8004 Zurich Tel.076 524 80 59
SWISSTAMIL.COM


NI LUCKY
mode
Redymade Garments Textiles
Imitation artificial ornaments
Militärstrasse 84, 2nd Floor
8004 Zürich Switzerland
Tel:043 317 12 06 Mob:078 827 82 50


Ganas Science Academy
2ம் வகுப்பு முதல் உயர்தரவகுப்பு வரை
Mathematik, Deutsch, English, Computer, Tamil
Gymnasium (6 Klasse) பரீட்சைக்கான
Mathematik, Deutsch, ஆகிய விசேட
பாடதிட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
English For London Examination
Classes Conduct by, Mr. M.R. Ganesh /
Mrs. M. Mathini
Mathematik: Mr.Gana
Deutsch: Herr. Robert / Frau. G.Laila /
Frau. G. Sarah / Frau. Lotti
Computer:. Mr. U. Manoj
S.Gana
Militärstrasse 84, 8004 Zürich
Tel:079 439 88 34 043 243 96 60

# Uduppiddy American Mission College

## அதிபரின் வாழ்த்துச் செய்தி.....

இந்த நூற்றாண்டில் சிந்தப்பட்ட அடர்த்தியான குருதியும் அலாதியான வியர்வையும் ஈழத்தின் சோகத்தை, வரலாற்று நியாயத்தை உலக உதடுகளை உச்சரிக்க வைத்திருக்கின்றன. சொந்த மண்ணின் நினைவுகளைச் சுமந்து கொண்டு, தாயகக் காற்றினைச் சுவாசிக்கத் தவம் கிடக்கும் தமிழினம் வெவ்வேறு தேசங்களில் விதைக்கப்பட்டிருந்தாலும் ஈழத்தின் பொதுக் கலாச் சாரத்தைக் கைவிடாத தன்மை தாயகத்தின் மேலான பற்றுதியைப் பறைசாற்றி நிற்கிறது.இத்தகைய பற்றுதியின் வடிவமாகவே புலம்பெயர் தேசங்களில் பூக்கும் பழையமாணவர் சங்கங்கள் திகழ்கின்றன. அறிவுப்பாலூட்டிய கல்லூரி அன்னையின் கௌரவத்தை அகில உலகெங்கும் அறிவிக்கும் முயற்சியில் அர்ப்பணிப்போடு செயற்படுவோரை நினைக்கையில் தாயக மண்ணும் கல்லூரித் தாயும் அகமகிழ்ந்து கொள்கின்றன.

வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கால்களான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஸன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என்பவற்றின் பெருமையினை பட்டை தீட்டி மெருகேற்றிப் பிரகாசிக்க வைக்கும் கல்லூரிகளின் அனைத்துலகச் சங்க இரண்டாவது ஆண்டுவிழாவினைக் கேள்வியுற்று புளகாங்கிதம் அடைந்தோம். புலம் பெயர் தமிழர்களின் பன்முகப் பணியினை வாழ்த்துவது ஈழத்தமிழர்களின் தலையாய கடமை என்றால் மிகையாகாது.

போர் மேகங்களில் ஊர்வலங்களின் நடுவே, கல்வித் தாய்க்கு உற்சவங்கள் நிகழ்த்திவரும் உன்னத பணியினை ஒவ்வொரு கல்வியாளனும் வரவேற்றின்றான். வாழ்த்துகின்றான். உலகமயமாக்கலின் நன்மைகளை எமது கல்லூரிகள் ஓரளவுக்கேனும் அனுபவித்து வருகின்றன என்றால், அதற்கு உங்களது செயற்பாடுகளே காரணம் என்பதனை வெளிப்படையாகச் சொல்வதற்கு எவருமே வெட்கப்படவில்லை. நிறங்களின் ஒன்றிணைவே வானவில்லின் தோற்றமாய் பரிணமிக்கின்றது, அதேபோல் அனைத்துலகச் சங்கத்தின் செயற்பாடுகளும் கல்வி வானிலே வர்ணஜாலம் புரிய வாழ்த்துகிறேன்.



க.தருமலிங்கம்

அதிபர்

உடுப்பிட்டி அமெரிகன் மிசன் கல்லூரி

# Uduppiddy American Mission College
## P.P.A Colombo

# வாழத்துச் செய்தி

கொழும்பு கிளைத்தலைவரின் வாழத்துச் செய்தி

தொடர்ச்சியானதும் நூற்றம்பதுக்கு மேற்பட்ட கால வரலாற்றுச் சிறப்பும் மிக்க உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அமைவிடத்தில் மாத்திரமன்றி, அயற் கிராமங்களிலும் பலருக்கு அறிவூட்டிய கல்லூரிகளாகத் திகழ்கின்றன.

அமெரிக்கன் மிசன் கல்லூரியும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் உருவாக்கிய மாணவர்கள் உலகளாவிய ரீதியில் பரந்து வாழ்வதால் இன்று கல்லூரியின் பெருமையைச் சித்தரிக்கும் பல நிகழ்வுகள் நிகழ்ந்து வருகின்றன.

ஊருக்கு வெளியே கொழும்புக்கிளை கலை நிகழ்வுகளை நிகழ்த்தி மலர் வெளியீடு செய்ததுடன் தாய்சங்கத்துடன் இணைந்து நூற்றியம்பது ஆண்டு பூர்த்தியை சிறப்பாக நடாத்தியதுடன், அஞ்சல் முத்திரையையும் வெளியிட்டது.

கனடாக்கிளை வானவில் நிகழ்வால் பாரம்பரியக் கலைகளைப் பேணி வருவதுடன் பணமும் சேகரித்து கல்லூரி வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கி வருகிறது.

சுவிற்சலாந்துக் கிளையும் வானவில் பல்சுவை நிகழ்சியோடு பழயை மாணவர்களையும் ஒன்றி கூட்டியுள்ளது.

பணியாவும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.



தலைவர்

கந்தையா நீலகண்டன்
பழைய மாணவர் சங்கம் கொழும்பு

# J/UDUPPIDDY GIRLS' COLLEGE
# VALVETTITURAI, SRI LANKA.

இன்றைய விழா சிறப்பாக வெற்றிகரமாக நிகழ வேண்டுமென உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழயை மாணவர்கள் அனைவருக்கும் குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். எமது கல்லூரியின் சார்பில் தவிர்க்க முடியாத காரணத்தால் எவரும் கலந்து கொள்ள முடியாமைக்கு எனது மன வருத்ததைத் தெரிவிப்பதுடன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அதிபர் ஊடாக இச் செய்தியை அனுப்புவதில் மன நிறைவடைகிறேன். கல்லூரி 1987 ஆம் ஆண்டில் முற்றாக அழிவுற்ற போது உடனடியாக அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பல தடைகள் இருந்தன. அவ்வேளையில் எமக்கு உதவிபுரிந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் கனடாக்கிளைப் பழைய மாணவர் சங்கத்தை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். தோடர்ந்து தற்போது இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர் சங்கமாக இணைந்து அவர்கள் பல்வேறு வழிகளிலும் வருடாந்தம் நிதி வழங்கி வருகின்றனர். லண்டனிலுள்ள பழைய மாணவிகள் நாம் அமைத்துவரும் மண்டபத்தின் மேடை மற்றும் ஒப்பனை அறை ஆகியவற்றிற்கு நிதி வழங்கியுள்ளனர். சுவிற்சலாந்திலுள்ள பழயை மாணவிகள் சிலர் இணைந்து ஒரு தொகையினை வழங்கியுள்ளனர். இவ்வாறாகப் பாடசாலையின் அபிவிருத்திக்கு எமது பழயை மாணவர் வழங்கும் உதவிக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது கல்லூரியில் ஏற்பட்ட அழிவுகள், திட்டமிட்ட புறக்கணிப்புகள், நாட்டிலேற்பட்ட இயல்புநிலையற்ற வாழ்க்கை போன்ற பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் எமது மாணவர் மத்தியில் மனிதத்துவத்தை நிலைபெறச் செய்யக்கூடிய கல்வியை வழங்க வேண்டிய கடமை எமக்குண்டு. அதற்குப் போதியளவு ஆசிரியர் வளம் எமக்குத் தேவை. அதைவேளை எழுத்தறிவை மட்டும் போதிப்பது சிறந்த கல்வியாக மாட்டாது. எனவே ஆளுமை விருத்திக்குரிய செயற்பாடுகளுக்குப் பொருத்தமான ஆளணியினர் எமக்குத் தேவை. ஆசிரியர் பற்றாக்குறைக்குப் பொருத்தமான ஆசிரியர்களை நியமித்துக் கொடுப்பனவுகளை வழங்கவும், பாண்ட் வாத்தியப் பயிற்சியாளர், வலைப்பந்தாட்டப் பயிற்சியாளர், உடற்பயிற்சிப் போட்டிப் பயிற்சியாளர் ஆகியோரின் கொடுப்பனவுகள், மெல்லக் கற்போருக்கான விசேட வகுப்புக்களை எடுப்போருக்கான கொடுப்பனவுகள் தகவல் தொழிநுட்பப் பிரிவைப் பராமரித்தல், நிவதாரணக் காவலாளிக்கான கொடுப்பனவு போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கும் பெருமளவு நிதி வருடாந்தம் தேவைப்படுகின்றது. இவற்றிற்குத் தாங்கள் வழங்கும் நிதியைத் திட்டமிட்டுப் பயன்படுத்தலாமென எதிர்பார்க்கின்றோம். இதேவேளையில் சுவிற்சலாந்திலுள்ள பழைய மாணவர் சங்கம் எமது வேண்டுகோளுக்கிணங்க துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு 250000.00 ரூபா தருவதற்குத் தயாராயுள்ளமையிட்டு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மீண்டும் அனைவருக்கும் வாழ்த்துக்கள். குறிப்பாக இவ்விழாவை முன்னெடுத்துச் செல்லும் குழுவினர் சர்வதேசமெங்கும் வாழும் பழயை மாணவர் சங்க உறுப்பினர் அனைவருக்கும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் சார்பில் வாழ்த்துக்கள்.



அதிபர்,
திருமதி. ஆர். குட்டித்தம்பி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

# Uduppiddy American Mission College & Girls' College P.P.A Switzerland

## நீங்கா நினைவுகளுடன் உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி....

பாடசாலை வாழ்க்கை அனைவர்க்கும் பசுமரத்தாணி போல் பதிந்து கொண்ட பல அனுபவங்களைத் தாங்கி நிற்கும் என்பதில் எவர்க்கும் ஐயமேயில்லை. அரிவரி முதல் Advancelevel வரை கல்விதனையெனக்குத் தந்த கலைக்கூடமது உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி! அரிவரியில் புஸ்பமக்கா ரீச்சர் முதல் Advancelevel இல் ஆர் பி மாஸ்ரர் வரை வகுப்பாசிரியர்களாக இருந்தவர்கள். தொடர்ந்து அனைத்து வகுப்புகளிலும் மாணவ முதல்வனாக கடமையாற்றும் சந்தர்ப்பம் வகுப்பாசிரியர்களால் கிடைக்கப் பெற்றவன். அக் கல்லூரியின் சூழலும் ஆசிரியர்களும் ஊட்டிய தன்நம்பிக்கைதான் சந்தர்ப்பவசத்தால் புலம்பெயர் நாட்டு வாசிகளாகி சொந்த மண்ணில் இழந்துவிட்ட நிறைவான வாழ்வை ஓரளவேனும் நிவர்த்திக்கும் மனத்துணிவை கொடுத்துள்ளது. நீங்கா நினைவுகளாக ஆசிரியர்களின் இன் முகங்கள் இன்றும் புலம் பெயர் வாழ்வில் புளகாங்கிதம் கொள்ளும் ஔடதங்களாகவமைந்துள்ளனவென்றால் மிகையாகாது. பால பண்டிதர் முத்துவேல் ஆசிரியர் மிக அழகாக தமிழ் அறிவையும் சமய அறிவையும் புகட்டியவர். அவர் வகுப்பறையில் நுழைந்தவுடனேயே மனதில் ஒரு ஆதங்கம். அவரிடம் பாடம் கற்கும் சந்தர்ப்பம் இனியும் கிட்டாதா என்ற ஏக்கம்! அவரிடம் தமிழைக் கசடறக் கற்கவும், அறிவியற் கதைகள் கேட்பதற்கும் கதைகள் மூலம் பாடங்களைப் புகுத்தும் அந்தக் கணீர் என்ற ஒலி இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழை நான் O/L வரைதான் கற்றவன். ஆனால் தமிழ்ப் பாடத்தில் ஆர்வம் மிகுதி பெறவைத்தது பண்டிதர் முத்துவேல் ஆசிரியரின் கண்டிப்பும் அன்பும் நிறைந்த போதனையே. அது மட்டுமல்ல அவர் கொள்ளும் காரணத்துடனான கோபமும் என் கண்களில் இன்றும் பளிச்சிடுகிறது. பண்டிதர் அவர்களின் அந்தக் கதைகளினின்றும் விடுபட முடியாத நான் பெரும் முயற்சியின் பலனால், மணியின் நாதத்திற்க்கொப்பான குரலினிமையினூடு அறிவுப் பொக்கிசங்களை நான் மட்டுமல்ல பலரும் கேட்டுப் பயன் பெறவேண்டும் என்பதற்காவும் என் ஆசானைக் கனம் பண்ணவும் நான் பங்கேற்கும் நிர்வாகம் ஒன்றான சூரிச் முருகன் ஆலய நிர்வாகிகளுடன் அவரின் சேவையின் மகத்துவத்தை உரைத்து சுவிற்சலாந்துக்கு அழைத்து ஆலய திருவிழாக் காலங்களில் காலையும் மாலையும் அவரின் சமய சொற்பொழிவுகளில் திழைத்து பெருமிதம் கொண்டேன். அவரது ஆற்றல் மிக்க சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்ட பலரும் அவரைப் பாராட்டடியதையிட்டும் அவர் எனக்கு குருவாக இருந்த பாக்கியத்தைப் பெற்றதையிட்டு மட்டற்ற பெருமிதம் கொணடேன். இவரின் சேவை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். அவர் எம்முடன் சுவிற்சலாந்தில் குறுகிய காலந்தான் தங்கியிருந்த போதும் ஊரில் அவர் கொண்டிருந்த பற்றுதலை எண்ணி மெய்சிலிர்த்துப் போனேன். நாம் சமய தமிழ் போதனைகளை தொடர விரும்பினாலும், பரீட்சையை எதிர்நோக்கி இருந்த மாணவர்களையிட்டு அவர் குறுகிய காலத்தில் நாடு திரும்ப வேண்டியதாயிற்று. இவரது தமிழ் சமய பணி சோர்வடையாது தொடர்வதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அவரின் மாணவனாக நான் இருந்ததையிட்டு பூரிப்படைகின்றேன்.

அடுத்த பக்கத்தில் தொடர்கிறது.....

முதல் பக்க தொடர்.....

சுவிற்சலாந்தில் நாம் இப்பொழுது வாழும்பொழுதுதான் கட்டுப்பாடுடனான கடமையை மேற்கொண்டு வாழ்வை அமைக்க வேண்டும் என்பதையும் நடைமுறையில் காட்டிய ஆசிரியர்களையும் கல்லூரியில் பாடம் கற்றதை நினைவு கூருகின்றேன். ?ஆர் பி சேர்? (சு. பொன்னம்பலம்) எனது வகுப்பாசிரியராக இருந்ததும் அக் காலத்தில நான் வகுப்பு முதல்வனாக கடமையாற்ற கிடைத்த சந்தர்ப்பங்களையும், கடமையை நான் கண்ணியமாக மேற்கொள்ள அவர் கடைப்படித்த ஒழுக்கங்கள் எமக்கு முன்னுதாரணமாக அமைந்தது. தினமும் இரண்டாம் பாடநேரம் மாணவ மாணவியர் வரவு பதிவுப் புத்தகத்துடன் அவர் முன் பிரசன்னமாவேன். ஆசிரியர்களின் பிரம்படிக்கு பயந்த காலத்தில் அவரது கண்டிப்பிற்கு உயர்தர வகுப்பு மாணவர்கள் மதிப்பளித்திருந்ததையும் நினைத்துப் பார்க்கிறேன். அவரின் அமைதியும் ஆழ்ந்த அறிவும் கற்பித்தலின் ஆற்றலும் அவரின் பாட நேரத்தில் வகுப்பறையில் நிசப்தமே நிலவும். உயர்தர வகுப்பில் மாணவ மணவியர் இணைந்தே கல்வி பயின்றோம். அனைவரும் அவரிடம் மிகவும் மரியாதையும் அன்பையும் கொண்டிருந்தோம். இதே காலத்தில் எனது இரசாயன ஆசிரியராக அமர்த்தப்பட்டார் திரு.சண்முகசுந்தரம் ஆசிரியர் ஆரம்பத்தில் சூனியமாக அறிமுகமான இரசாயனவியல் இன்று நான் இரசாயனத் துறையில் சுவிற்சலாந்திலும் மேற்படிப்பைத் தொடர்ந்து பாண்டித்தியம் பெற்று தொழில்வாய்ப்பைப் பெறவும் துணைநின்ற சண்முகசுந்தரம் ஆசானின் அந்த கற்பித்தலாற்றலை எண்ணிப் பார்க்கிறேன். எந்த விளக்கத்தையும் இன்முகத்துடன் அணுகும் அவரின் அனுபவமும் திறமையும் எம்மை அப் பாடத்தில் ஆர்வம் பெற வைத்தது மட்டுமல்லாமல் அதன் நெளிவு சுழிவுகளை அறியவும் தூண்டியது. நான் மாணவ முதல்வனாகவும் இருந்த காலத்தில் ஒழுக்க முறைகளை மாணவர்கள் மத்தியில் நிலைநாட்ட அவர் கூறும் அறிவுரைகளும் பாடசாலைக்கு வெளியே அரசியல் உட்பட பொது விடயங்களை கதைத்துக் கொள்ள அவர் சிநேகமாகப் பழகும் பண்பும் என் மனதை விட்டு இன்றும் அகலாத பசுமையான நினைவுகளாகவுள்ளன. பாடசாலைப் படிப்பிற்கு அப்பாலும் கிராமத்த சூழலில் குருவாகவும் வீட்டின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தும் பாடசாலையையும் கிராமத்து வாழ்வையும் ஒருங்கிணைத்தே வாழ்ந்த அமெரிக்கமிசன் கல்லூாயின் ஐந்தாம் வகுப்பு வரையிலான தலைமை ஆசிரியர் ஆறுமுகம் வாத்தியார், பாடசாலைக்கும் ஊருக்கும் பல சேவைகளைப் புரிந்த சீதா ரீச்சர் போன்றோர் பலரின் மனதிலும் தமக்கென்றே ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள். உடுப்பிட்டி கிராமத்தில் திகழும் அமெரிக்கமிசன் கல்லூரி அக் கிராமத்திற்கு மட்டுமல்ல பல அயற் கிராமங்களுக்கும் ஒளிச் சுடராக மிளிர்ந்தது. திறமைசாலி, திறமையற்றவரென்ற பாகுபாடின்றி தூர இடங்களிலிருந்து வரும் மாணவ மாணவியர்க்கும் அனுமதியளித்து அனைவரையும் அணைத்துக்கொண்டு எமக்கு அறிவொளி பெற வைத்த அன்னையிவள். அச்சுடர் விருட்சமாகி இன்னும் பல சேவைகள் புரிந்திட பழைய மாணவர் சங்கங்கள் வெளிநாடுகளிலும் உதயமாகி செயற்பட்டு வருகிறதென்றால் அப் பாடசாலையின் அறிவூட்டலே காரணமாகும். அப் பாடசாலைக்கு நன்றி உடையவர்களாக இருக்கும் அப் பாடசாலை மாணவர்களின் சேவையை இட்டு பெருமைப்படுகின்றேன். நான் கல்வி பயின்ற பல ஆசிரிய ஆசிரியைகளையும் சம காலத்தில் நாம் பழகிய ஆசான்களையும் நினைவு கூருகின்றேன். பாடசாலையில் கடமையை மட்டுமல்ல பாடசாலைக்கு வெளியே சமூகத்துடனான வேவையில் கடமை உணர்வுகளையும் கொண்டிருந்த அதிபர்களையும் நினைத்துப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட பொது நோக்குடனான நேர்க்குறி கொண்ட பெருந்தகைகள் வழிநடத்திய கல்லூரி, கல்விவாசமற்ற மடைமைகளினால் தகர்கப்பட்ட செய்தி அனைவரையும் புண்படுத்தியது. விபரிக்க முடியாத சில தடைகள் கடந்தகாலங்களில் நிலவினாலும், அறிவுப்பசி தீர்த்த அன்னைக்கு இன்று சுவிற்சலாந்தில் விழா எடுக்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் அன்னையின் விருட்சமான எதிர்கால திட்டங்கட்கு இங்குவாழ் பழையமாணவர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இல்லை என்றும் இயலாது என்றும் சொல்லாதே. என்ற அடி கொண்ட விவேகனந்தரின் வாக்கு பலிதமாகட்டும். எத்தடை வரினும் அத்தடை தாண்டி பழம் பெருமை மட்டுமல்ல நிகழ்காலத்திலும் ,எதிர் காலத்திலும் பெருமைகள் சேர்த்திடவும் அறிவுப்பசி தீர்த்திடும் அன்னையீவள் கடமைதனைத் தொடர வாழ்த்தியே நிற்கின்றோம்.



உபதலைவர்

விஜயநாதன் இரத்தினகுமார்
இரசாயனவியலாளர்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் சுவிஸ்

# Uduppiddy American Mission College
## Old Student London

## லண்டனிலிருந்து வாழ்த்துச்செய்தி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி புதுப் பொலிவு பெற்று, பிற நாடுகளில் வாழும் பழைய மாணவர்களும் கலை நிகழ்ச்சி மூலம் மக்களை மகிழ்வித்து படித்த கல்விக்கூடத்துக்கு தமது பங்களிப்பை நல்கி வருகின்றனர்.

பிறந்த நாட்டில் ஒரு வகையான போராட்டம் புகுந்த நாட்டில் இன்னொரு வகையான போராட்டம். நேரத்துடனும் அந்நிய சூழலுடனும் போராடும் வேளையில் பல நாடுகளில் வாழும் பள்ளித்தோழருடனும், பழைய மாணவர்களுடனும் உறவாடும், பாரம்பரிய கலை களைக்கண்டு மகிழவும் கனடா வானவில் வழி சமைத்தது.

எம்மையெல்லாம் ஊரான உடுப்பிட்டிக்கும் கல்விக்கூடமான அமெரிக்கன் மிசன் கல்லூரிக்கும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கும் அழைத்துச் செல்லும் வானவில் சுவிற்சலாந்திலும் எல்லா வகையாலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

கலாநிதி வசந்தகுமார், சுவிஸ் கணா, ஜெயசீலன், இரத்தினகுமார், கணேசதாஸ், உலகநாதன், ஜெகநாதன், அருண், மதன் உட்பட்ட வானவில் வெற்றிக்கும் உழைக்கும் எல்லோருக்கும் நல்வாழ்த்துக்கள்.

இராசையா ஜெயராஜா
பொறியியலாளர்

ஒன்லைன்
லண்டன்



**Uduppiddy American Mission College & Girls' College P.P.A Switzerland**

# நினைவலைகளில் பண்டிதர்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் முதுகெலும்புகளில் பண்டிதர் திரு. சி. வேலுப்பிள்ளையும் ஒருவர். அவருடைய எடுப்பான தோற்றம், நியாயத்துடன் கூடிய கண்டிப்பு, கற்பிக்கும் திறன் இவை பாடசாலைக்குப் பயனும் பெருமையும் ஏற்படுத்தின. மேலும் பாடசாலையில் சைவசமயத்தை வளர்த்த பெருமையும் இவருக்கே உண்டு. பலமுறை பாடசாலை நிர்வாகத்துடன் முட்டி மோதிய சந்தர்ப்பங்களும் உண்டு. இவருடைய தோற்றம், நேர்மையான பேச்சு, துணிவு, கடமையுடன் கூடிய கற்பித்தல் என்பனவற்றால் பண்டிதருக்கு பாடசாலையின் அதிபர் உட்பட யாவரும் மதிப்பளித்து வந்தனர். அவருடைய புகழ் பாடசாலை இருக்கும் வரை நிலைக்கும். அன்னாரை அன்புடன் நினைவு கூரும்

பண்டிதர் திரு வேலுப்பிள்ளை



எஸ் கணபதிப்பிள்ளை
உடு.அ.மி கல்லூரி மற்றும் பெண்கள் கல்லூரி
பழையமாணவர்சங்க சுவிஸ்கிளைத் தலைவர்.

# S.S. Selladurai & Miss Mann Arangam

| | |
|---|---|
| விழாத்தலைவர்: | திரு. யோ. அருண் |
| பிரதம விருந்தினர்: | அதிபர். திரு. க. தர்மலிங்கம் |
| | (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி) |
| விசேட அதீதி: | திரு. எஸ். தில்லைநடராசா |
| | மேலதிகச் செயலாளர் (கல்வி அமைச்சு) |
| சிறப்பு விருந்தினர்: | திரு. ஆர். முத்துரத்தினானந்தன் |
| | (இலங்கை மின்சாரசபை பிரதிப்பணிப்பாளர்) |
| | சீதா வேலுப்பிள்ளை (கனடாக்கிளை போசகர்) |
| | திருமதி. சீறீதரன் சந்திரவிமலா (லண்டன்) |
| | திரு. வை. அழகலிங்கம் (ஜெர்மனி) |
| கௌரவவிருந்தினர்: | திரு. சதாசிவம் உபசாகரன் (சிகரம்) |

## நிகழ்ச்சி நிரல் சனிக்கிழமை 24.06.2006

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல்: | அகவணக்கம், கல்லூரிக்கீதம் |
| பேச்சு: | மேற்பிரி |
| நாடகம்: | ஏகலைவன் (காமதேனு கல்விக கழகம்) |
| விழாத்தலைவர் உரை: | யோ.அருண் |
| பேச்சு: | பாலர் பிரிவு |
| நடனம்: | ராதா நடனாலய மாணவிகள் |
| பேச்சு: | கீழ்ப்பிரிவு |
| உரை: | ஆர். முத்துரத்தனானந்தன் |

இடைவேளை

| | |
|---|---|
| சங்கீத சாகரம்: | காரைக்குடி, கிருஸ்ணமூர்த்தி |
| | புல்லாங்குழல் மேதை, ஞானவரதன் |
| உரை: | எஸ். தில்லைநடராசா |
| ராக சங்கமம்: | மீரா ரவீந்திரன் (கனடா) |
| பேச்சு: | மத்திய பிரிவு |
| நடனம்: | திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகள் |
| கவிதை: | திரு. பொன்னையா விவேகானந்தன் |

இடைவேளை

| | |
|---|---|
| வில்லுப்பாட்டு: | கண்ணகி கல்வி நிலையம் |
| உரை: | திரு. வி. இரத்தினகுமார் (உபதலைவர்) |
| பாட்டு: | சிறீதரன் பிரசாந் (லண்டன்) |
| மோர்கத்தைய நடனம், | செல்வஜோதி திலக்சிகா, திலக்சன் |
| | லோகநாதன் அஸ்விதா, தீபன் நிசாந்தன் |
| களம்: | புலம் பெயர்ந்தோர் வாழ்விலே நேசிக்கவேண்டியது |
| | தாய்மண்ணை..? பொருளாதாரம்..? கலாச்சாரம்..? |

## பேராசிரியர், அ. துரைராஜா அரங்கம்

| | |
|---|---|
| விழாத்தலைவர்: | திரு. க. ராதாகுமார் |
| பிரதம விருந்தினர்: | கலாநிதி. திரு. த. வசந்தகுமார் |
| | (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி பழைய மாணவர் சங்க சர்வதேச தலைவர்) |
| விசேட அதீதி: | திரு. தி. யோகசாமி |
| | உடுப்பிட்டி அ.மி.கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் |
| சிறப்பு விருந்தினர்: | திரு. இ. ஜெயராஜா (லண்டன்) |
| | திரு. க. ஜெயக்குமார் (சுவிஸ்) |
| | திரு. த. சுபேந்திரராஜா (டென்மார்க்) |
| கௌரவவிருந்தினர்: | திரு. வி. வரதன் Vella Credit |
| | திரு. எம். மனோ Siva Market Limited |

# நிகழ்ச்சி நிரல் ஞாயிற்றுக்கிழமை 25.06.2006

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல்: | கல்லூரிக்கீதம் |
| பேச்சு: | மேற்பிரி |
| வில்லுப்பாட்டு: | காமதேனு கல்விக் கழகம் |
| விழாத்தலைவர் உரை: | க. ராதாகுமார் |
| பேச்சு: | பாலர் பிரிவு |
| நடனம்: | திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகள் |
| பேச்சு: | கீழ்ப்பிரிவு |
| உரை: | தி. யோகசாமி |

இடைவேளை

| | |
|---|---|
| நாடகம்: | கண்ணகி கல்வி நிலையம் |
| பொருளாளர் அறிக்கை: | திரு. கு. ஜெயசீலன் |
| உரை: | த. வசந்தகுமார் (பிரதம விருந்தினர்) |
| நடனம்: | ராதா நடனாலய மாணவிகள் |
| பேச்சு: | மத்திய பிரிவு |
| நாடகம் (நகைச்சுவை): | காதிலை பூ |

இடைவேளை

| | |
|---|---|
| நன்றியுரை: | திரு. பெ. ஜெகநாதன் (செயலாளர்) |
| கவிதா நிகழ்வி: | ஒரு தந்தையின் உயில் |
| | பொன்னையா விவேகானந்தன், மீரா ரவீந்திரன் |
| உரை: | திரு. சி. கணபதிப்பிள்ளை (சங்கத்தலைவர்-சுவிஸ்) |
| விவாத அரங்கு: | புலம் பெயர் மண்ணிலே பிள்ளைகள் தவரான வழியில் செல்ல காரணம் பெற்றோரே, சூழலே... |

# Uduppiddy American Mission College & Girls' College P.P.A

## ஊர் உறவுகளும் கல்லூரி நினைவுகளும்

உடுப்பிட்டி மண்ணில் பிறந்து, அமெரிக்கன் மிசன் கல்லூரியில் அரிவரி முதல் கபொத (உயர்தரம்) வரையில் கல்வி பயின்றபோது எனது ஊரை எண்ணி கல்லூரியை நினைத்து மகிழ்ச்சியடைந்ததுண்டு.

கால ஓட்டத்தில் எனது மண்ணைச் சேர்ந்தவர்கள் எனது கல்லூரியில் கல்வி பெற்றவர்கள் உலகத்தின் பல பாகங்களில் முன்னணியில் திகழ்வதை அந்நாடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் நேரடியாகக் கண்டு பிரமிப்பு அடைந்திருக்கின்றேன்.

பதினைந்து நாடுகளுக்கு சென்றபோது, அறிவியல் துறையில், கலைத்துறையில், வர்த்தகத்துறையில் சமூகப்பணிகளில் நம்மவர் பங்களிப்பு கண்டு பிரமித்திருக்கின்றேன். ஆப்போதெல்லாம் நம்மூரை சாதாரண கிராமம் என்றோ நமது பாடசாலையை சாதாரண பாடசாலை என்றோ கருதமுடியாது என்ற உணர்வு பெற்றிருக்கின்றேன்.

கடந்த ஆண்டு கனடா வானவில் அதனையடுத்து நடைபெற்ற சர்வதேச பழைய மாணவர் ஒருக்கிணைப்பு கூட்டம் நேற்று நடந்தது போல நினைவு. அந்நினைவுகளோடு சுவிற்சலாந்து வானவில், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் உலகளாவிய ஒன்றியம் என்பது பிரமிப்பையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

விரிந்து பரந்துள்ள உருளும் உலகில் உடுப்பிட்டி மாணவ மாணவியர் வானவில் நிகழ்வில் ஒன்றாகி மீண்டும் மீண்டும் ஊர் உறவுகளோடு கல்லூரி நினைவுகளோடு களிப்படைய வாழ்த்துக்கள்.



மேலதிகசெயலாளர்
கல்வி அமைச்சு

உடுவை எஸ். தில்லைநடராசா

# J/UDUPPIDDYGIRLS' COLLEGE
## OLD GIRLS ASSOCIATION
"LIGHTED TO GIVE LIGHT"

UDUPPIDDY
SRILANKA.
12.06.2006.

Patron :
DR. A. NAVARATNARAJAH
B.Vsc (Hons) M.Phili (U.K)
Head Animal Science
Faculty Of Agriculture
University Of Jaffna
Secretary :
MRS.K.THEVARAJAH
Treasurer :
Miss. R. NAGESWARY
Teacher, J/ / Uduppiddy Girls' College

PRESIDENT :
Mrs. L.N.Josseph
B.Sc.Dip-IN-ED
Deputy Principal
J / Uduppiddy Girls' College
Vice President :
Miss.S.Veluppilai.
Retired Teacher.


### உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின்
### பழைய மாணவர் சங்கத்தலைவியின்
### ஆசிச்செய்தி.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியினதும் , அமெரிக்கன் மிஷன் ஆண்கள் கல்லூரியினதும் பழைய மாணவர்கள் இணைந்து சுவிற்சலாந்து நாட்டில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் சர்வதேச பழைய மாணவர் சங்கத்தினருக்கு எனது ஆசிகளை வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

கனடாவில் ஆரம்பித்து இன்று சர்வதேசத்திற்கும் வியாபித்துள்ளன. இச்சங்கத்தினர் ஆண்டுதோறும் நடத்தும் வானவில் நிகழ்வு ஒரு அர்த்தம் பொதிந்த நிகழ்வாகும். பல வர்ணங்களும் இணைந்து வானவில்லாகக் காட்சியளிப்பது போல பல் நாட்டுப்பழைய மாணவரும் இணைவது வானவில் போன்றதே.

அது மட்டுமல்லாது வானவில்லைக் கண்டதும் சிறார்கள் மழையின் வருகையின் அடையாளமாகக் கொள்வர். அதுபோல எமது கல்லூரிகள் வானவில் நிகழ்வு எனக் கண்டதும் எமது கல்லூரிகளுக்கு நிதி மழை பொழியும் ஆரம்பம் என எண்ணி மகிழ்வர்.

இத்தகைய ஒரு நிகழ்வுக்கு வழிவகுத்த இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர் நிகழ்வுக்கும் அங்குரார்ப்பண வைபவத்திற்கும் எனது உளம்நிறை வாழ்த்துக்களை பழைய மாணவர்களினது சார்பில் தெரிவித்து நிற்கின்றேன்.

LNe Joseph.

திருமதி.எல்.என்.ஜோசேப்,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

# Uduppiddy American Mission College & Girls' College P.P.A Switzerland

## *** வாழ்த்து ***

சுவிஸில் வானவில் மகிழ்ச்சிக்குரிய கலைவண்ணங்களின் நிகழ்வு. ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய். ஒரு மகனை சான்றோன் என கேட்ட தாய் மகிழ்ச்சி அடைவாள் என்றால் எத்தனையோ சான்றோர்களை உருவாக்கிய எமது கல்லூரித்தாய் எத்தனை மகிழ்ச்சி அடைந்திருப்பாள்.

அவள் உருவாக்கிற சான்றோர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அந்தத் தாயை மகிழ்விக்கவும் மேன்மை அடையச்செய்வதற்கும் நன்றி தெரிவிப்பதற்கும் ஒன்று கூடுவதற்கும் என்றே தோன்றியதே இந்த வானவில். கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக கனேடிய மண்ணில் புலம்பெயர்ந்து வாழ்ந்த கல்லூரித்தாயின் மக்களால் நடத்தப்பட்டுவந்து அதன் மூலம் கல்லூரியை மீண்டும் புதுமெருகேற்ற தோன்றிய வானவில் 2006இல் சுவிஸ் வாழ் கல்லூரித் தாயின் பிள்ளைகளால் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது.

அத்துடன் பல அயல் நாடுகளிலும் இருந்தும் பலர் வந்து கலந்து கொள்வதும் சிறப்புக்குரியது. தங்களை வளர்த்துவிட்ட கல்லூரியின் வளர்ச்சிக்கென பழைய மாணவர்கள் இணைந்து செயற்படுவது மிகவும் பெருமைக்குரியது.

இந்நிகழ்சி சிறப்புற நடைபெறவும் அதன் நோக்கங்கள் ஈடேறவும் என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயலாளர்

பெ. ஜெகநாதன்
உடுப்பிட்டி அமெரிகன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - சுவிஸ்



# Uduppiddy American Mission College & Girls' College P.P.A Switzerland

## வாழ்த்துச் செய்தி......

வடமராட்ச்சி பகுதி கல்வி முன்னேற்றம் கண்ட தமிழ்ப் பகுதிகளில் ஒன்று. உடுப்பிட்டி மண்ணில் உயர்ந்து எழுந்த கல்விமான்கள் ஆயிரம் ஆயிரம். இவற்றுக்கு வித்திட்ட பெருமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, பெண்கள் கல்லூரிக்கே பெரும் பங்கு. மேற்படி எங்கள் பாடசாலை கல்வியில், விளையாட்டுத்துறையில் சாரணியம் போன்ற பல்துறைகளிலும் கால்பதித்து வெற்றி கண்டுள்ளது. 150 வருடங்களுக்கு மேல் எங்கள் கிராமத்துக்கும், அயல் கிராமங்கள் பலவற்றுக்கும் கல்வி அறிவு ஊட்டி வளர்த்த பெருமை இந்தப் பாடசாலைக்கு உண்டு. எங்கள் காலத்தில் எங்களுக்கு பல ஆசிரியர்கள் தன்னலம் கருதாது சேவை செய்தார்கள். அவர்களில் திரு.அ.எம்பெருமான் பல்கலை வித்தகனாக இருந்து எங்களை வழி நடத்தினார். அவருடைய ஆங்கிலம் கற்ப்பிக்கும் முறை, கலை உலகில் மாணவர்களை அடையாளம் காட்டிய விதம் என்பன யாராலும் மறக்கமுடியாதது. பல ஆறறல் மிக்க ஆசிரியர்களை இழந்துள்ளோம். அதில் திரு.அ.எம்பெருமானின் இழப்பு மிகவும் ஈடு செய்யமுடியாது. மேலும் உடுப்பிட்டியில் அமைந்துள்ள ஆண்கள், பெண்கள் பாடசாலைகள் பல நாட்டுப் பற்றாளர்களையும் விடுதலை விரும்பிகளையும் உருவாக்கித்தந்துள்ளது. பாடசாலை வளர்ச்சிக்கான பழைய மாணவர்கள் சங்கம் உருவானது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.



உப தலைவர்.
எஸ். கணேசதாஸ்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, பெண்கள் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சுவிஸ்.

# Uduppiddy American Mission College



# ஆசியுரை.....

கனடாவில் உதயமாகி இன்று சுவிஸ்ஸில் கால்பதித்து உள்ள எமது பழைய மாணவர் சங்கத்தின் வானவில் கலை நிகழ்ச்சி மிகச்சிறப்புடன் நடைபெறுகிறது என அறிந்து அளவிலா மகிழ்ச்சியடைகின்றேன். சர்வதேச அளவில் ஒரு பெரிய கலந்துரையாடல் ஒன்றையும் கலைநிகழ்ச்சியையும் நடத்தும் சுவிஸ் வாழ் எமது பாடசாலை பழைய மாணவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது. சுவிஸ் பழைய மாணவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி எமது பாடசாலை பழைய மாணவர்களின் சங்க கிளைகள் உலகளாவ பரவவேண்டும் என்பது எங்கள் பேரவா. இங்கு நடக்கும் சர்வதேச கலந்துரையாடலும் வானவில் நிகழ்ச்சியும் சர்வதேச அளவில் பேசப்படும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. எமது பழைய மாணவர் சங்கம் மேலும் மேலும் பல்வேறு சிறப்புகளையும் பெற்று வளர வேண்டும் என இறைவனை யாசிக்கின்றேன்.

இ.முத்துரட்ணானந்தன்
பழைய மாணவன் – உடுப்பிட்டி அமெரிக்கன்மின் கல்லூரி

பிரதிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை மின்சாரசபை,
கொழும்பு.

# Uduppiddy American Mission College & Girls' College P.P.A Canada

## கனடாவிலிருந்து

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியினுடைய சர்வதேச பழைய மாணவர் சங்கம் சுவிஸ் நாட்டில் நடாத்துகின்ற முதலாவது சர்வதேச வானவில் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வும் பெருமிதமும் அடைகிறேன். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பழைய மாணவர்களை சர்வதேச ரீதியில் ஒன்றிணைக்கின்ற எனது நெடுநாட் கனவு இன்று பலிதமாவது எனக்கு அளவற்ற ஆனந்தத்தை அளிக்கிறது.

போரினால் சிதைந்து போன எமது கல்லூரியை மீள எழுப்புகின்ற பணியில் கை கொடுக்குமுகமாக பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் ஆலோசனையின் பேரில் கனடா மண்ணில் பழைய மாணவர் சங்கமும் அதைத் தொடர்ந்து வானவில் விழாவும் உருவாகின. கனடா வாழ் பழைய மாணவர்களின் அயராத ஒன்றுபட்ட உழைப்பின் பயனாக வானவில் விழா பதினாறு ஆண்டுகள் கடந்தும் வெற்றி நடை போடுகிறது. எமது கல்லூரிகள் இரண்டும் மீளவும் நிர்மாணிக்கப்பட்டு இன்று நிமிர்ந்து நிற்கின்றன. கனடாவில் பழைய மாணவர்களை வானவில் ஒன்றிணைத்தது. கல்லூரித்தாய்க்காக தங்கள் சொந்த விடயம் போல ஒன்றுபட்டுழைத்தார்கள். கல்லூரிக்காலம் மீண்டது போல அவர்கள் ஒரு வளாகத்தவராயினர். இந்த வளாகம் உலகையணைத்து வியாபிக்க வேண்டுமென நான் வேணவா உற்றேன். இதற்கான கால்கோள் சென்ற ஆண்டு கனடாவில் நடைபெற்ற வானவில் விழாவில் சர்வதேச பழைய மாணவர்களின் சமுகத்தில் இடப்பெற்றது. சர்வதேச பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் என்ற வகையிலே இதை முன்னெடுத்து செயலாக்கும் முனைப்போடு இவ்வாண்டின் ஆரம்பத்தில் நான் யு. கே., பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்ற போது எமது பழைய மாணவர்கள் அளவற்ற உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் சங்கத்திற்கான ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டார்கள். அதன் விளைவே இன்று பல நாட்டின் வண்ணங்களும் சேர்ந்து சுவிஸ் நாட்டில் வண்ண எழிற்கோலமாக வானவில் எழுகிறது. இத்தகைய சாதனையில் எமது கல்லூரிப் பழைய மாணவர்களே முன்னோடிகளாகவும் முன்னுதாரணமாகவும் விளங்குகிறார்கள் என்பதில் நாம் நிச்சயமாகப் பெருமை கொள்ளலாம்.

இந்த வானவில் விழா சிறந்த கலைவிழாவாக மட்டுமல்ல கல்லூரி நண்பர்கள் மீளவும் கூடுகின்ற களிப்பு மிக்க விழாவாகவும் திகழுமென்பதில் ஐயமில்லை. இவ் விழா வெற்றிபெறவும் மேலும் பல வெற்றிவிழாக்களுக்கு இது முன்விழாவாக அமையவும் வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி, வணக்கம்.



சர்வதேச தலைவர்

தம்பிராஜா வசந்தகுமார்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

# Uduppiddy American Mission College & Girls' College

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. உடுப்பிட்டி கோயில்பற்றின் இருகண்களாக. மிளிருகின்றன. கலையகங்களாகத் திகழ்கின்றன.

கனடா, கொழும்பு பழைய மாணவர் சங்கங்களின் ஆதரவுகள் கிட்டின ஓரளவு வளர்ச்சியைக் கண்டன.

இது போதாது. வளர்ச்சிக்கு இன்னும் அதிக இடமுண்டு இத் தருணத்தில்.

பழைய மாணவர் சங்கங்களின் சர்வதேச ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

இச் செயற்பாடு எமது கல்லூரிகளின் வளர்ச்சியை மேலும் ஓங்கச் செய்யும், மேலும் பிரகாசிக்கச் செய்யும்.

இப்பயனுள்ள எத்தணிப்புக்கு எனது மணமார்ந்த வாழ்த்துக்கள்.

இவ்வொன்றியத்தின் அணைத்து முயற்சிகளும் வெற்றியீட்ட எனது நல்லாசிகள்.

அரவிந்தம்
கரணவாய் தெற்கு
கரவெட்டி
021 226 35 62

க.சண்முகசுந்தரம்
இக் கல்லூரிகளுடன் தொடர்புடைய
முன்னாள் ஆசிரியர்.




REHOBOTH Saloon
Ladies and
Gents Hair
Cutting
Tellstrasse 17, 8004 Zürich, Switzerland
Tel & Fax:043 317 11 30 Mobile:079 677 94 36


Customer Service 0800 288 800
abiline
உறவைத் தேடி உங்கள் உறவுகளுடன்
தெளிவான/ நீண்ட நேரம் உரையாட..
abi line
30 CHF
switzerland


SF
SARAN FILM
Digital Film Technologie
Graphic
Printing
CD,DVD Production
Web Design
Software Customize
Hardware
Internet Provider Service
076 450 30 30



SWISSKAN
Always on time ...
SWISSKAN
Contact:: SWISSKAN MANUFACTURING SA
World Trade Center
P.O BOX - 122, 6982 Agno, SWITZERLAND
Tel: 0041(0)91 6468703-38
E-mail: info@swisskanwatch.ch
Web: www.swisskanwatch.ch

# Uduppiddy American Mission College

## வாழ்த்துச் செய்தி

இன்றைய சூழ்நிலையில் பாடசாலை முன்னேற்றத்திற்கு மட்டு மன்றி சமூக மேம்பாட்டிற்காகவும் முன்னின்று செயற்படும் எமது கல்லூரியின் பழையமாணவர் சங்கம் தமது இரண்டாவது ஆண்டு பூர்த்தியை சர்வதேச அளவிலான விழாவாக இன்று சுவிற்சலாந்தில் நிகழ்த்துகின்ற வேளையில் இன்று போல் என்றும் இச்சங்கம் சிறப்புடன் செயற்பட வாழ்துகின்றேன்.

ச.தில்லையம்பலம்
ஓய்வு பெற்ற ஆசிரியர்
உடுப்பிட்டி அமரிக்கன் மிசன் கல்லூரி.



# Uduppiddy American Mission College & Girls' College P.P.A Switzerland

## நன்றி நவில்கிறோம்.

இந்த வானவில்லுக்கு வர்ணம் தீட்ட பொருளாதாரப்பேருதவி புரிந்த அனைத்துநல் நெஞ்சங்களையும் வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.
வானவில் நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்த சகல பார்வையாளர்கள், கலைஞர்கள் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள்.

எமது அழைப்பை ஏற்று எமது விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த அதிபர் க.தர்மலிங்கம், கலாநிதி T.வசந்தகுமார், கல்வி அமைச்சு செயலாளர் எஸ்.தில்லைநடராஜா, பொறியலாளர் முத்துரத்தினானந்தன், எங்கள் பாடசாலை முன்னாள் அதிபர் பழைய மாணவர்சங்க (தாய்ச்சங்கம்) செயலாளர் திரு T. யோகசாமி, செல்வி சீதா வேலுப்பிள்ளை, இ.ஜெயராஜா, திருமதி. சிறீதரன் சந்திரவிமலா, த.சுபேந்திரராஜா (டென்மார்க்) திரு. எம் மோகனதாஸ், திரு S.ரவீந்திரன் (கனடா) ஆகியோருக்கும் எங்கள் பாராட்டுகளுடன் கூடிய நன்றிகள்.

எங்களுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பிய சகலருக்கும் எங்கள் மனங்கனிந்த நன்றி.
கலை நிகழ்ச்சிகளை வழங்கிய எங்கள் பழைய மாணவர்களின் பிள்ளைகள், பேச்சுப்போட்டி மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதயத்தால் நன்றி.

கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் நடனநிகழ்ச்சிகளைத் தந்து மகிழ்வித்த நடன ஆசிரியைகள் திருமதி மதிவதனி சுதாகரன் (திருக்கோணேஸ்வரா நடனாலயம், திருமதி ஞானசுந்தரி வாசன் (ராதாநடனாலயம்) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

செல்வி சுபேந்திரராஜா தட்சாயினி, கலை நிகழ்ச்சியை வழங்கிய திருமதி அம்பிகா இராசலிங்கம் (கண்ணகி கல்வி நிலையம்) திருமதி சிறீகலாசேனா (காமதேனு கல்விக்கழகம்) செல்வி மீரா ரவீந்திரன் காரைக்குடி கிருஂணமூர்த்தி ஞானவரதன் IBC அம்பலவாணர் கிருஸ்ணா. கராட்டி நிகழ்ச்சியை வழங்கிய சங்கர், செல்வி லோகநாதன் தர்மிர்த, ஸ்ருதிப் பிரியர்கள் இசைக்குழு மற்றும் செல்வஜோதி திலக்சிகா, திலக்சன், நிசாந்தன் ரதீஸ்வரன், லோகநாதன் அஸ்விதா, மேலும் கவியரங்கம் விவாதஅரங்கம் ஆகியவற்றில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது விழா சிறப்புற நடைபெற பல வழிகளிலும் உதவிபுதிந்த திரு N.லோகநாதன், திருமதி மஞ்சுளா லோகநாதன் ஆகியோருக்கும் எமது மனமார்ந்தநன்றி.

அச்சுவேலைகளை திறம்பட செய்து வழங்கிய செல்வன் T.சரவணன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

விளம்பரங்கள் செய்து உதவிய T.T.N, வீரகேசரி, தினக்குரல் ஆகியவற்றிற்கும் எமது நன்றி.
வீடியோ அமைப்பு வழங்கிய T.T.N, நிழல்படங்களை வழங்கிய மகேஸ், ஒலி அமைப்பு செய்து உதவிய ஐவரி அவர்களுக்கும் எம்மனங்கனிந்த நன்றிகள்.

கனடாவில் இருந்து எமது சங்கத்திற்கு வழியாட்டிய கலாநிதி த.வசந்தகுமார் அவர்கட்கும், திருமதி கேதீஸ்வரன் இந்திரா, திரு.எம். மோகனதாஸ் அவர்கட்கும் எமது சுவிஸ் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.


Muniyandi Villas
Indian & Ceylon Restaurant & Take out
Zweierstrasse 55, 8004 Zürich, Switzerland
Tel:0041 44 242 71 11 Mobile:0041 79 678 41 20


காலத்துகேற்ப புதிய டிசைன் நகைகள்
பழைய நகைகளை புதிய வடிவில் மாற்ற
அனைத்து திருத்த வேலைகளுக்கும்.
தாய்நிலம்
மரக்கறி, உடன் மீன்
இறைச்சி, மற்றும்
நுகர் பொருட்களும்
Heinrichstrasse 85
8005 Zürich Switzerland
Tel:044 271 73 74/78, Fax:044 271 73 79
வன்னிக்கான பணமாற்று சேவையும் செய்து தருகின்றோம்.



# உங்கள் கனவு இல்லத்தை நாம் நிஜமாக்கித்தருகின்றோம்.

## HAPPY HOME IMMOBILIEN

சுவிசில் நீங்கள் விரும்பிய மாநிலத்தில் காணி வாங்கி வீடு கட்ட சுவிசில் நீங்கள் விரும்பிய மாநிலத்தில் வீடு வாங்க உங்கள் ஓய்வூதிய பணத்தினை முதலீடாக மாற்றிட காணி வாங்குவது முதல் வீடு கட்டி முடிப்பது வரையான அனைத்து விடையங்களையும் சுவிஸ் அரச அனுமதியுள்ள கட்டிடத்துறையில் நீண்ட கால அனுபவமிக்கவர்கள் மூலம் மிக சுலபமாகவும், மிக விரைவாகவும், மிகக் குறைந்த வட்டியுடன் மிகத்தரமான முறையில் நீங்கள் விரும்பிய வகையில் உங்கள் வீட்டைக் கட்டிக்கொள்ள.....

2000ம் ஆண்டு முதல் சூரிச் மாநிலத்தில் இயங்கி வந்த நிறுவனம் 2006 முதல் சுவிசின் அனைத்து மாநிலங்களிலும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது.





Happy Home immobilien GmbH

**Manesestrasse 10, 8003 Zürich, Switzerland**
**Tel:043 534 04 41, Fax:043 243 82 58**
**Natel:079 624 43 84, 079 402 75 58**
**www.happyhomeimmo.ch e-mail.info@happyhomeimmo.ch**